முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம்: 49

எனது இலக்கம்: டீஎம்எஸ்/ஏ/2012/சீஜஆர்
முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்
பொதுச் திறைசேரி
கொழும்பு 01
2012.12.24

அமைச்சுக்களின் செயலாளர்கள் /
அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும்
முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனிகளின்
தலைவர்கள் அனைவருக்கும்,

**<u>அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனிகளின் ஊழியர்களுக்கு 2012ஆம் ஆண்டிற்கான மிகையூதியங்களைச் செலுத்துதல்</u>**

1. **மிகையூதியங்களைச் செலுத்துதல்**

2012ஆம் ஆண்டிற்கு அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனிகளில் பணி ஊழியர்களுக்கான மிகையூதியம் செலுத்தும் செயற்பாடுகள், 2012.12.19 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூடடத்தில் அனுமதியளிக்கப்பட்ட முறையில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.1 2011 ஆம் ஆண்டில் அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனிகளின் ஊழியர்களுக்கு மிகையூதியம் செலுத்தப்பட்ட அதே அடிப்படைகளின் கீழ் 2012 ஆம் ஆண்டுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் செலுத்தப்படல் வேண்டும்.

1.2 2012 ஆம் நிதியாண்டில் நட்டமடைந்துள்ள அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனிகளின் ஊழியர்களுக்கு மிகையூதியங்களை 2011 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட அதே அடிப்படைகளின் கீழ் செலுத்துவதற்கு முன்னர் பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும். இதற்கான கோரிக்கைகள் உரிய அமைச்சின் செயலாளரின் சிபாரிசுடன் அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்திடம்/தேசிய வரவு செலவுத்திடடத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

2. **பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்**

2.1 மிகையூதியம் ஒன்றாகக் கருதக் கூடிய அரையாண்டுக் கொடுப்பனவு ஒன்றினை யாதேனும் நிறுவனம் ஒன்று தனது ஊழியர்களுக்கு செலுத்தியிருக்கும் சந்தர்ப்பத்தில், அக்கொடுப்பனவை மேலதிக மிகையூதியமாகக் கருதுவதற்கு விசேட அமைச்சரவை அனுமதி பெறப்பட்டிருந்தாலன்றி அத்தொகையானது அவ்வருட இறுதியில் செலுத்தப்படும் வருடாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவின் முற்பணத் தொகையாகக் கருதப்படல் வேண்டும்.

2.2 இந்தச் சுற்றறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு வருடாந்த மிகையூதியத்தினை செலுத்துவதற்கு முன்னர் அமைச்சரவையின் அல்லது நிருவாக சபையின் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

2.3 மேற்படி மிகையூதியக் கொடுப்பனவினை செலுத்துவதற்காக, சம்பந்தப்பட்ட அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனிகளின் வருடாந்த கணக்குகள் 2002.05.24ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் பீஎப்/ பீஈ/21இன் பிரகாரம் உரிய தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் திறைசேரியினால் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க தொழில் முயற்சிகளுக்கான நல்லாட்சி தொடர்பிலான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் உரிய முறையில் பின்பற்றப்பட்டிருத்தல் வேண்டும்.

விசேட குறிப்புக்கள்

3.1 ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான நிதி திறைசேரியினால் வழங்கப்படமாட்டாது.

3.2 கூட்டு ஒப்பந்தங்கள் அல்லது அவற்றுக்குச் சமனான புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் ஊடாக சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்துகின்ற கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான கம்பனிகளுக்கு இச்சுற்றறிக்கை ஏற்புடையதாகமாட்டாது.

3.3 அரசாங்கத் தொழில் முயற்சிகள் மற்றும் நியதிச் சட்டச் சபைகளின் சம்பள முரண்பாடுகள் தொடர்பில் 2012.01.11 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்க, இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை என்பவற்றின் முகாமைத்துவங்கள், உரிய தொழிற்சங்கங்களுடன், அவர்களின் மிகையூதியக் கொடுப்பனவுகள் உள்ளடங்கும் விதத்தில் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய கூட்டு ஒப்பந்தங்களை 2013.06.30 ஆந் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்தல் வேண்டும்.

3.4 இந்தச் சுற்றறிக்கையின் ஒழுங்கு விதிகளுக்கு புறம்பாக யாதேனுமொரு மிகையூதியக் கொடுப்பனவுகள் செலுத்தப்படும் பட்சத்தில், அதற்காக அமைச்சரவையிடமிருந்து முன்கூட்டிய அனுமதி பெறப்படுதல் வேண்டும்.

4. மேலதிக விளக்கங்கள்

4.1 இந்தச் சுற்றறிக்கை தொடர்பாக யாதேனும் மேலதிக விளக்கம் தேவைப்படும் பட்சத்தில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் / அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்துடன் / தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பணிவுடன் வேண்டப்படுகின்றீர்கள்

கையொப்பமிட்டது: பீ. பி. ஜயசுந்தர
திறைசேரியின் செயலாளர், மற்றும்
நிதித்திட்டமிடல் அமைச்சின் செயலாளர்

பிரதிகள்:

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. கணக்காய்வாளர் நாயகம்
4. அரச தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகம்
5. தேசிய வரவு செலவுத் திட்டப் பணிபப்பாளர் நாயகம்